**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்புநீதிபதி, சத்தியமங்கலம்**

2023-ம் ஆண்டு ஜீலை திங்கள் 05-ம் நாள் புதன்கிழமை
(2054 திருவள்ளுவராண்டு சோபகிருது வருடம் ஆனித்திங்கள் 20-ம் நாள்)

**I.A.No.6/2023**
**in**
**O.S.134/2020**

கண்ணம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

சம்பாள் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 03.07.2023 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.தங்கராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.கந்தசாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இந்த மனுவானது, மனுதாரர் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்று அவற்றை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கக் கோரி, கட்டளை 7 விதி 14 (3) மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இந்த மனுவானது, மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்

பிரதிவாதிக்கு எதிராக பிராமிசரி தொகையை வசூல் செய்யும் பொருட்டு வழக்கு செய்துள்ளேன். அதில் பிரதிவாதி எதிர்வாதம் செய்து வருகிறார். மேற்படி மனுவில் இன்று மனுதாரரது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மனுவில் கண்டுள்ள ஆவணம் மனுதாரரிடத்தில் இல்லாமல் போய்விட்டது. தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணம் மனுதாரரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய இன்றியமையாத ஆவணம் ஆகும். எனவே குறித்த காலத்தில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்வது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது. அல்லாதவரை மனுதாரர் அளவிட முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:-

எதிருரையில், மனு பொய்யானது என்றும், மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை இந்த மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், பிரமாணப்பத்திரிக்கையின் பாரா-2 இல் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவையாகும் அனைத்தையும் மனுதாரர்/வாதியே நிருபிக்கக் கடமைப்பட்டவராவார். மனுதாரர்/வாதியின் மனுவில் தாவா தாக்கல் செய்த சமயத்தில் மனுவில் கண்டுள்ள ஆவணம் மனுதாரரிடத்தில் இல்லாமல் போய்விட்டது தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணம் மனுதாரரது தரப்பு வழக்கை நீருபணம் செய்ய இன்றியமையாத ஆவணமாகும் என்று குறிப்பிட்டுள்ளது முற்றிலும் இவ்வழக்கிற்காக கூறப்பட்டுள்ள பொய்யான சங்கதிகள் ஆகும். மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதி கடந்த 10.03.2016-ம் ஆம் தேதியிலேயே தனது பூமியினை விற்பனை செய்துள்ளார். அன்றிலிருந்து இன்று வரை ஆவணங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று

குறிப்பிட்டுள்ளது நம்பும்படி இல்லை. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் உள்ளது. மேற்படி மனு பிரமாணப்பத்திரிக்கையில் பாரா-3 இல் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவையாகும் அனைத்தையும் மனுதாரர்/வாதியே நிருபிக்கக் கடமைப்பட்டவராவர். மேற்படி ஆவணத்தை குறித்த காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது நம்பும்படியாக இல்லை. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணத்திற்கு வேலுச்சாமி குடும்பத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. என்ற காரணத்தைக் கூறி இவ்வழக்கில் முக்கிய அங்கமா செயல்படும் வேலுச்சாமிக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற காரணத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை செய்த ஏதோ ஒரு கிரைய ஆவணத்தை இவ்வழக்கிற்காக வேண்டி காலதாமதமாக தாக்கல் செய்திருப்பது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத் தக்கதல்ல. இந்த மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

4. **<u>தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீர்வு:-</u>

6.1. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி ஆவார் என்றும், மனுதாரர் பிரதிவாதிக்கு எதிராக பிராமிசரி தொகையை வசூல் செய்யும் பொருட்டு வழக்கு செய்துள்ளார் என்றும், அதில் பிரதிவாதி எதிர்வாதம் செய்து

வருகிறார் என்றும், மேற்படி மனுவில் இன்று மனுதாரரது தரப்பு விசாணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மனுவில் கண்டுள்ள ஆவணம் மனுதாரரிடத்தில் இல்லாமல் போய்விட்டது என்றும், தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணம் மனுதாரரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய இன்றியமையாத ஆவணம் ஆகும் என்றும், எனவே குறித்த காலத்தில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்வது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது என்றும், அல்லாதவரை மனுதாரர் அளவிட முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும் என்றும், வாதிட்டார்.

6.3. எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், மேற்படி ஆவணத்தை குறித்த காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது நம்பும்படியாக இல்லை என்றும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணத்திற்கு வேலுச்சாமி குடும்பத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது என்றும், என்ற காரணத்தைக் கூறி இவ்வழக்கில் முக்கிய அங்கமா செயல்படும் வேலுச்சாமிக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற காரணத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை செய்த ஏதோ ஒரு கிரைய ஆவணத்தை இவ்வழக்கிற்காக வேண்டி காலதாமதமாக தாக்கல் செய்திருப்பது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத் தக்கதல்ல என்றும் வாதிட்டார்.

6.4. மேற்படி வழக்கானது மனுதாரரால் புரோநோட் தொகையை எதிர்மனுதாரரிடம் இருந்து வசூலித்து தரவேண்டி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள போது மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.5. மனுதாரர் மனுவில் கண்ட ஆவணங்கள் மிக முக்கியமான ஆவணங்கள்

என்றும் தற்போது தான் அந்த ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளார். மனுவில் கண்ட ஆவணம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை செய்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதா கிரைய ஆவணமா மற்றும் இந்த வழக்கிற்கும் மனுவில் கண்ட ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லையா என்பதை அசல் வழக்கில் தான் முடிவு செய்ய இயலும். இந்த மனுவில் முடிவு செய்ய இயலாது. இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டால் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறித்து குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். அதன் மூலம் அவர்கள் தனது தரப்பு எதிர்வாதத்தை நிருபிக்கலாம். இந்த மனுவில் கண்ட ஆவணங்கள் பொய்யானது என்று எதிர் மனுதாரர் தரப்பில் வாதங்கள் முன் வைத்திருந்தாலும், மனுதாரர் தரப்பில், மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மனுவில் கண்ட ஆவணங்கள் மிகவும் அவசியமானது என்று கூறியுள்ளதால், மனுதாரருக்கு, மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்குவது அவசியம் என்று, இந்த மனுவை அனுமதிக்கலாமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. முடிவாக, இந்த மனு செலவுதொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. இந்த மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுதொகையாக ரூ.200/- 11.07.2023-க்குள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 12.07.2023.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜீலை திங்கள் 05-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும்  எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.